**சுருக்கம்**

பாசனம் - நீர்வள ஆதார அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து ஏரிகள் / நீர்நிலைகள் - மீன்பாசி குத்தகை வருமானத்தை நீரினை பயன்படுத்துவோர் சங்கங்களுக்கு பகிர்ந்தளித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

பொதுப்பணித்(டபிள்யூ2) துறை

அரசாணை(நிலை)எண் : 16

நாள்:14.01.2011
திருவள்ளுவர் ஆண்டு 2041
மார்கழி 30

படிக்க :

i. தலைமைப் பொறியாளர், (இயக்கம் மற்றும் பராமரிப்பு), நீர்வள ஆதாரத்துறை அவர்களின் கடித எண் B3/844/WUA/2009, நாள் : 03.03.2010

ii. முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள அதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை அவர்களின் கடித எண் PM/எபு 36/WUA நிதி/ 2009, நாள் 07.05.2010

**ஆணை :**

தமிழ்நாடு விவசாயிகள் நீர்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டம் 2000-ன் படி விவசாயிகள் அமைப்பின் கட்டமைப்பு, பாசன மேலாண்மையில் பங்கேற்று செயல்படுத்துவதில் கீழ்க்கண்ட மூன்று அடுக்குகள் உள்ளன.

i) முதல் அடுக்கு: சிறு நீர்ப்பாசன அமைப்பில் நீரினைப்பயன்படுத்துவோர் சங்கம் (Water Users Associations).

ii) இரண்டாம் அடுக்கு: பகிர்மானக் குழு (Distributory Committee)-இது கிளைககால்வாய்கள் மற்றும் பெரிய நீர்வரத்ததுக்களில் உள்ள நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களைக் கொண்டு அமைக்கப்படுகிறது.

iii) மூன்றாம் அடுக்கு : திட்டக்குழு (Project committee)- அதிக அளவிலான பகிர்மானக் குழுக்களை கொண்டதாக உயர்நிலைகளில் இருக்கும்.

iv) 10,000 ஹெக்டேருக்கும் அதிகமான நீர்ப்பாசன பரப்பினைக கொண்ட பெரிய நீர்பாசன அமைப்புகள் மேற்குறிப்பிட்ட மூன்று அடுக்குகளைக் கொண்டதாக இருக்கும். 2000 ஹெக்டேருக்கு மேல் 10,000 ஹெக்டேர் வரை நீர்பாசன பரப்பினைக் கொண்ட நடுத்தர அமைப்புகளில் திட்டக்குழுக்கள் இருக்காது. பகிர்மான குழுக்களும், நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களும் இருக்கும். 2000 ஹெக்டேர் வரை நீர்ப்பாசன பரப்புக் கொண்ட நீர்ப்பாசன அமைப்புகளில் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்கள் மட்டும் இருக்கும்.

Scanned with CamScanner

2.) நீர்ப்பாசன அமைப்புகளின் மூலம் பயன்பெறும் நில உடைமையாளர்களில் மிக குறைந்த வருமானமும், விவசாயத்தையே வாழ்வாதாரமாகவும் கொண்டுள்ளனர். இவர்களால் நீராதாரங்களை இயக்கவும் (மற்றும்) பராமரிக்கவும் இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே விவசாயிகள் அமைப்பின் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம், பகிர்மானக்குழு மற்றும் திட்டக்குழுக்களை ஊக்குவிக்கவும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், விவசாயிகள் அமைப்பிற்கு நிதி ஆதாரம் வழங்குவது இன்றியமையாததாக உள்ளது என்று முதன்மை தலைமைப்பொறியாளர் நீர்வள ஆதாரத்துறை அவர்கள் தெரிவித்துள்ளார்.

3) இந்நிலையில் அரசு நீர் நிலைகளில் மீன்பாசி குத்தகை மற்றும் அதன் வருமானத்தில் விவசாயிகள் அமைப்பிற்கு பகிர்ந்தளித்தல் தொடர்பாக பின்வருமாறு தலைமைப்பொறியாளர் (இயக்கம் மற்றும் பராமரிபபு) அவர்கள் பரிந்துரை செய்துள்ளார்.

(i) தமிழ்நாடு அரசு மீன்வளத்துறையின் மூலம் தற்பொழுது மீன்பாசி ஏலம் விடப்படும் ஏரிகளில் அதே நடைமுறையைப் பின்பற்றலாம்.

(ii) வருவாய்த்துறையின் மூலம் குளங்களில் தற்போது மீன்பாசி ஏலம் விடப்படுவதை அந்தந்த ஏரிகளில் தொடர்ந்து கடைப்பிடிக்கலாம்.

(iii) பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அணைகள், கண்மாயிகள், ஏரிகள் மற்றும் இதர நீர் நிலைகளின் கரையை பலப்படுத்தவும், ஆழப்படுத்தவும், கலுங்கு, மதகு மற்றும் பாசன அமைப்பு கட்டுமான அமைப்புகளின் பராமரிப்பு பணிகளுக்காக நிதி ஆதாரம் தேவைப்படுவதால், மீன்வளத்துறை மற்றும் வருவாய்த்துறையினரால் விடப்படும் மீன்பாசி ஏலத்தொகையிலிருந்து 50% (50 விழுக்காடு)-னை பொதுப்பணித்துறை நீர்வள ஆதார துறைக்கு வழங்க வேண்டும்.

(iv) பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பின் கட்டப்பாட்டிலுள்ள ஏரிகளில் அரசு உத்தரவு இல்லாமல் மீன்பாசி உரிமைகளை பயன்படுத்தி வரும் அமைப்புகள் மற்றும் தனிநபர் மீன்பாசி ஏலத்தை நடத்துவதற்கு தடைவிதித்து தமிழ்நாடு விவாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டம் 2000-ன் படி சட்டரீதியாக விவசாயிகள் அமைப்பிற்கு பராமரிப்பு பணிக்காக மீன்பாசி குத்தகைத் தொகையில் ஒரு பகுதியை அளிக்கும் பொருட்டு இக்குளங்களில் மீன்பாசி ஏலம் விடும் அதிகாரத்தினை பொதுப்பணித்துறைக்கே வழங்கலாம்.

(v) இத்தகைய வருமானத்திலிருந்து 50 விழுக்காட்டினை விவசாயிகள் அமைப்புகளுக்கு வழங்கலாம்.

(vi) இவ்வாறு மீன்பாசி குத்தகை வருமானத்தின் 50% தொகையினை விவசாயிகள் அமைப்பின் மூன்று நிலையிலான் அடுக்குகளுக்கு கீழ்க்காணும் விகிதத்தில் பகிர்ந்து அளிக்கலாம்.

(அ) நீரினை பயன்படுத்துவோர் சங்கம்(முதல் நிலை)-60%

(ஆ) பகிர்மான குழு (இரண்டாம் நிலை) – 20%

(இ) திட்டக்குழு(மூன்றாம் நிலை) – 20%

Scanned with CamScanner

4) மேலே பத்தி 3-ல் காணும் தலைமைப்பொறியாளர், (இயக்கம் மற்றும் பராமரிப்பு) நீர்வள ஆதாரத்துறை அவர்களின் பரிந்துரையை கவனத்துடன் பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

(i) தமிழ்நாடு அரசு மீன்வளத்துறையின் மூலம் தற்பொழுது மீன்பாசி ஏலம் விடப்படும் ஏரிகளில் அதே நடைமுறையைப் பின்பற்றலாம்.

(ii) வருவாய்த்துறையின் மூலம் குளங்களில் தற்போது மீன்பாசி ஏலம் விடப்படுவதை அந்தந்த ஏரிகளில் தொடர்ந்து கடைபிடிக்கலாம்.

(iii) பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அணைகள், கண்மாயிகள், ஏரிகள் மற்றும் இதர நீர் நிலைகளின் கரையை பலப்படுத்தவும், ஆழப்படுத்தவும், கலுங்கு, மதகு மற்றும் பாசன அமைப்பு சார்ந்தான அமைப்புகளின் பராமரிப்பு பணிகளுக்காக நிதி ஆதாரம் தேவைப்படுவதால், மீன்வளத்துறை மற்றும் வருவாய்த்துறையினரால் விடப்படும் மீன்பாசி ஏலத்தொகையிலிருந்து 50% (ஐம்பது விழுக்காடு)-ஐ பொதுப்பணித்துறை / நீர்வள ஆதார துறைக்கு அத்துறைகள் வழங்க வேண்டும்.

(iv) பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள ஏரிகளில் அரசு உத்தரவு இல்லாமல் மீன்பாசி உரிமைகளை பயன்படுத்தி வரும் அமைப்புகள் மற்றும் தனிநபர் மீன்பாசி ஏலத்தை நடத்துவதற்கு தடைவிதிக்கப் படுகிறது. தமிழ்நாடு விவாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டம் 2000-ன் படி சட்டரீதியாக விவசாயிகள் அமைப்பிற்கு பராமரிப்பு பணிக்காக மீன்பாசி குத்தகைத் தொகையில் ஒரு பகுதியை அளிக்கும் பொருட்டு இந்த ஏரிகளில் மீன்பாசி ஏலம் விடும் அதிகாரத்தினை பொதுப்பணித்துறைக்கே வழங்கப்படுகிறது.

(v) இத்தகைய வருமானத்திலிருந்து 50 (ஐம்பது) விழுக்காட்டினை விவசாயிகள் அமைப்புகளுக்கு வழங்கலாம்.

(vi) இவ்வாறு மீன்பாசி குத்தகை வருமானத்தின் 50% விழுக்காடு தொகையினை விவசாயிகள் அமைப்பின் மூன்று நிலையிலான (சங்கங்களுக்கு) அடுக்குகளுக்கு கீழ்க்காணும் விகிதத்தில் பகிர்ந்து அளிக்கலாம்.

(அ) நீரினை பயன்படுத்துவோர் சங்கம்(முதல் நிலை)-60%

(ஆ) பகிர்மான குழு (இரண்டாம் நிலை) - 20%

(இ) திட்டக்குழு (மூன்றாம் நிலை) — 20%

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.1181/பொ.ப.II/2011, நாள் : 12.01.2011 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கி.தனவேல்
அரசு செயலாளர்.

Scanned with CamScanner